**OS.NO: 93/2024**

**PW 1 :** பாலு **த/பெ.**துரைக்கண்ணன்

நாள் : 18.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் 1 முதல் 4 வரை தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா 4வது அயிட்டம் சொத்தின் ச.எண்.364/3 மொத்த விஸ்திரணம் 19 சென்ட். அந்த அயிட்டம் சொத்து எனது தந்தைக்கு UDR திட்டத்தின் கீழ் 1986ல் கிடைக்கப்பெற்றது. அதற்கு முன்பு எனது கொள்ளு பாட்டி முனியம்மாவிற்கு பாத்தியமாக இருந்தது. எனது கொள்ளு பாட்டியடமிருந்து எனது பாட்டி ருக்மணியம்மாவிற்கு அனுபவத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது. ருக்மணியம்மாள் மேற்படி அயிட்டம் சொத்தை அனுபவித்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு தான் தெரியும். ருக்மணியம்மாள் மேற்படி சொத்தை அனுபவித்தார் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி முனியம்மாவிற்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. முனியம்மாவிற்கு சஞ்சீவ ரெட்டி, ருக்மணியம்மாள் மற்றும் பெரியசாமி ரெட்டி ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். முனியம்மாவின் மகள் ருக்மணியம்மாள் 4வது அயிட்டம் சொத்தை அனுபவித்து வந்ததாக நான் கூறியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அயிட்டம் சொத்து முனியம்மாவிற்கு பாத்தியமாக இருந்தது என்று விவரம் Resurvey பதிவேட்டின் இடம் பெற்றுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் முனியம்மாவினுடைய அசல் சொத்து பத்திரம் என் வசம் தான் உள்ளது. முனியம்மா மற்றும் அவருடைய 2 மகன்கள் சேர்ந்து 07.12.1919, 09.12.1938, 25.06.1951 ஆகிய தேதிகளில் மற்றும் 25.10.1957 ஆகிய தேதிகளில் தனி நபருக்கும் அரசாங்கத்திற்கும் மேற்படி அயிட்டம் சொத்தை அடமானம் வைத்துள்ளார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முனியம்மா 04.07.1966ல் இறந்து விட்டார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முனியம்மா இறந்த பிறகு அவருடைய 2 மகன்கள் தலா 7 1/2 சென்ட் வாய் வழியாக பாகபிரிவினை செய்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நினைவு தெரிந்ததலிருந்து நான் தான் அனுபவித்து வருகிறேன். சஞ்சீவ ரெட்டி 25.09.1979 அன்று இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான் தேதி எனக்கு சரியாக தெரியாது. சஞ்சீவ ரெட்டியின் மனைவி பெயர் நைனியம்மாள். அவர்களுக்கு வாரிசு இல்லை. நைனியம்மாள் 31.08.1981 அன்று ஆவண எண்.2/81 முன்னிலைக்கு பெரியசாமியின் மகன்களான 1 பிரதிவாதியான ஆறுமுகம் மற்றும் வேலு, ஏகாம்பரம் ஆகியோர்களுக்கு ஒரு உயில் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்று

சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நைனியம்மாள் 18.12.1983 அன்று இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். நைனியம்மாள் இறந்த பிறகு மேற்படி 9 1/2 சென்ட் மற்றும் பெரியசாமி ரெட்டினுடைய பாகமான 9 1/2 சென்டை சேர்த்து பெரியசாமியின் மகன்கள் மூவரும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் மேற்படி தாவா 4வது அயிட்டம் எனது தந்தைக்கு UDR மூலம் கிடைத்தது என்று நான் கூறுவது வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 4வது அயிட்டம் சொத்தின் மீது எனது தந்தைக்கு எந்த விதமான உரிமை மற்றும் அனுபவம் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இன்று வரை அந்த சொத்து என் அனுபவத்தில் தான் உள்ளது. என் தந்தை 06.06.2006 அன்று ஆவண எண்.899/2006 முன்னிலைக்கு எனது பெயருக்கு கிரைய ஆவணத்தை மேற்படி சொத்து குறித்து எழுதிக் கொடுத்துள்ளார். எனது அப்பாவிற்கு மேற்படி 4வது அயிட்டம் சொத்துக்கு உரிமையில்லாத பட்சத்தில் எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றும் அந்த ஆவணம் 1 முதல் 4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 6 மற்றும் 7 அயிட்டம் சொத்துக்கள் இரண்டும் சேர்ந்து தற்போது ச.எண்.364/A/4 என்ற எண்ணில் 20 சென்ட் ஆக உள்ளது என்று சொன்னால் அவ்வாறு மாற்றம் செய்தது தவறு என்று கூறி தான் நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். அது குறித்து தாவாவில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். நான் கூறுவது போது எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 20 சென்ட் எனக்கு எவ்வளவு பாத்தியப்பட்டது என்றால் முழுவதும் எனக்கு தான் பாத்தியப்பட்டது. எவ்வாறு பாத்தியமானது என்றால் எனது தாத்தா 10 சென்ட் நிலத்தை கிரையம் வாங்கி இருந்தார். எனது தந்தை சஞ்சீவ ரெட்டியுனுடைய வாரிசுதாரர்களிடம் 8 சென்டையும் கோபால் ரெட்டியுனுடைய வாரிசுதாரர்களிடம் அவர்களுடைய பாக சொத்தையும் வாங்கியுள்ளார். என்னுடைய தாத்தா மாணிக்க ரெட்டி சின்னசாமி ரெட்டியிடமிருந்து 06.02.1954 அன்று பதிவான ஆவண எண்.1393/1954 என்ற Resold Agreement என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனது தந்தைக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. ஆகையால் நான் கூறிய 10 சென்ட் நிலம் எனது தாத்தாவிற்கு வரவில்லை அதனால் நான் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. பத்திரம் உள்ளது. கண்ணியப்ப ரெட்டி என்பவர் 25.07.1961 அன்று ரோடு போடுவதற்காக 3 1/2 சென்ட் நிலத்தை அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அடங்கலில் தவறாக கண்ணியப்ப ரெட்டியினுடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அதை மாற்றி பிரதிவாதிகள் உரிமை கொண்டாடியுள்ளார்கள். அடங்கலை தவிர அவர்களிடம் வேறு எந்த ஆவணமும் கிடையாது. மேற்படி 10 சென்ட் நிலத்தில் மீதமுள்ள 6 1/2 நிலத்தை கண்ணியப்ப ரெட்டி வாரிசுகள் தெய்வாணை, கலாவதி, சீனிவாசன் மற்றும் தனக்கோட்டி ஆகியோர்கள் 09.06.2022 அன்று கிரைய ஆவண எண்.1302/2022 முன்னிலைக்கு மேஜர் சண்முக சுந்தரம்

என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் தவறுதாலாக UDRல் திருத்தி கிரையம் கொடுத்ததால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 8வது அயிட்டம் சொத்தின் மொத்த விஸ்திரணம் 15 சென்ட் அதில் எனது தந்தை செட்டில்மண்ட் எழுதிக் கொடுத்தது 11 1/2 சென்ட். மீதமுள்ள 3 1/2 சென்ட் கண்ணியப்ப ரெட்டி பெயரில் தான் உள்ளது. செட்டில்மண்ட் சொத்தான 11 1/2 சென்ட் எனது தந்தைக்கு எப்படி பாத்தியாமானது என்றால் அதைப்பற்றி எனது தந்தைக்கு தான் தெரியும். மேற்படி 15 சென்டில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது 3 1/2 சென்ட் தான் என்று சொன்னால் சரியல்ல. துரைக்கண்ணன், சின்னசாமி, கண்ணியப்ப ரெட்டி மற்றும முனியம்மாளுக்கு பாத்தியப்பட்டது தான் 8வது அயிட்டம் சொத்து என்றும் எனது தந்தை வேண்டுமென்று UDR ல் மாற்றி எனது பெயருக்கு செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மண்ட் பத்திரம் சட்டப்படி செல்லுபடி ஆகாது அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தாவா 1,3, 4, 6 முதல் 8 அயிட்டம் சொத்துக்ளை பொறுத்து எனக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அயிட்டம் சொத்துக்களுக்காக உருவாக்கப்பட்ட வருவாய் துறை மற்றும் பதிவுத்துறை ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் அவைகள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அயிட்டம் சொத்துக்களை பொறுத்து தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.18 17:52:07 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.